# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. ''தமிழுக்கும் அமுது என்று பேர்''எனப்பாடியவர் _______________ .

   (ஔவையார், பாவேந்தர், இளங்கோவடிகள்)

2. 'வேளாளர்' என்ற சொல் குறிப்பது _______________ .

   (உழவரை, மீனவரை, வணிகரை)

3. கோபுரத்தில் சிவனுடைய நூற்றெட்டுக் கூத்துநிலைகளும் செதுக்கப்பட்டுள்ள கோவில் _______________ .

   (மதுரைமீனாட்சிஅம்மன்கோவில், காஞ்சிகாமாட்சிஅம்மன்கோவில், தஞ்சைப்பெருங்கோவில்)

4. மட்டுநகர் _______________ எனச்சிறப்பாக அழைக்கப்படுகின்றது.

   (மீன்பாடும்வாவி, தேன்பாடும்வாவி, அலைபாயும்வாவி)

5. அரிசி மாவினால் _______________ போடுவர்.

   (கோளம், கோழம், கோலம்)

6. மன்னார் பட்டினத்தின் துறைமுகம் _______________ அமைந்திருந்தது.

   (மாதோட்டத்தில், புத்தளத்தில், மடுவில்)

7. கோவில்மணி _______________ என ஒலித்தது.

   (கணீர்கணீர், கலீர்கலீர், பளீர்பளீர்)

8. பழந்தமிழரது பண்பாடு, கலைகள் பற்றி ______________________

எனும் பெருங்காப்பியம் கூறுகின்றது.

(நல்வழி, சிலப்பதிகாரம், மூதுரை)

9. பின்வருவனவற்றுள் துவர்ப்புச் சுவையுடையது __________________ .

(பாக்கு, உப்பு, மிளகாய்)

10. நாங்கள் எல்லோரிடமும் __________________ ப் பேசவேண்டும்.

(இனிமைக்கு, இனிமையாக, இனிமையால்)

11. கவின்கலைகளில் மிகவும் சிறந்த கலை எனக் கூறப்படுவது

______________________ .

(சிற்பம், நடனம், ஓவியம்)

12. எந்தச் சூழலிலும் தான் வாழும் மண்ணைவிட்டு வேறு எங்கும்

போகாத பறவை ______________________ .

(குயில், செண்பகம், கோழி)

13. **விடுகதை:-**

நாடெல்லாம் சுற்றிவரும் நாட்டுக்குள் வராது அது ________________ .

(சிற்றுந்து, பேருந்து, கப்பல்)

14. உணவுப்பொருட்கள் விளைவதற்கு மூலகரணியமாக விளங்குவது

______________________ .

(வானம், நிலா, கதிரவன்)

15. மார்க்கோனியால் வானொலி ______________________ .

(கண்டுபிடித்தார், கண்டுபிடிக்கப்பட்டது, கண்டுபிடிப்பார்)

16. ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி ______________________

ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

(மூன்று, ஐந்து, நான்கு)

17. **குறள்:-** செயற்கரிய ______________________ பெரியர் சிறியர்

செயற்கரிய செய்கலா தார்

(செய்யார், செய்வோர், செய்வார்)

18. வயலும் வயல் சார்ந்த இடமும் ______________________ .

(குறிஞ்சி, மருதம், நெய்தல்)

19. பின்வருவனவற்றுள் கமழ்வுப் பொருள் ______________________ .

(முத்து, ஏலம், பருத்தி)

20. பலமாக ______________________ காற்றினால் மரங்கள் முறிந்தன.

(வீசிய, பெய்த, எறித்த)

21. ______________________ ஒலிகளைக்கேட்க இனிமையாக இருக்கும்.

(பறவைகளால், பறவைகளை, பறவைகளின்)

22. பாவேந்தரால் எழுதப்பட்ட நூல்களில் ஒன்று ______________________ .

(விவிலியநூல், அழகின்சிரிப்பு, நீதிநெறிவிளக்கம்)

23. மன்னார் உலகவணிகத்துறையாக விளங்கியதற்குச் சான்றாக அங்கு

____________________ கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(கிரேக்கநாணயங்கள், உரோமநாணயங்கள், எகிப்துநாணயங்கள்)

24) அம்மா நேற்று எனக்கு நல்ல கதையொன்று ____________________ .

(கூறினார், கூறுவார், கூறுகின்றார்)

25) களைவது என்பதன் பொருள் ____________________ .

(சேர்ப்பது, நீக்குவது, ஆக்குவது)

26. வட்டம் + மேசை என்பதைச் சேர்த்து எழுதினால் ____________________ .

(வட்டமேசை, வட்டம்மேசை, வட்டமானமேசை)

27. மாட்டுப்பொங்கலை ____________________ என்றும் அழைப்பர்.

(தைப்பொங்கல், பட்டிப்பொங்கல், உழவர்திருநாள்)

28. தங்களுக்குப்பின் இளங்கோதான் பேரரசனாக வருவான் எனக் கூறியவன் ____________________ .

(நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன், கணிகன்)

29. ____________________ என்றும் நன்மையே செய்!

(நான், நீ, அவன்)

30. **பழமொழி :-** அடம்பன் கொடியும் ____________________ மிடுக்கு.

(வரண்டால், மிரண்டால், திரண்டால்)

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நாங்கள் என்றும் நல்ல பிள்ளைகளாக வாழவேண்டும். நல்ல பழக்கவழக்கங்கள் உள்ளவர்களையே நல்ல பிள்ளைகள் எனக் கூறுவர். பெற்றோர் சொற்கேட்டல், ஆசிரியரை மதித்தல், மூத்தோரை மதித்தல், உண்மை பேசுதல், பிறருக்கு உதவுதல் போன்றன நல்ல பழக்க வழக்கங்கள் ஆகும். நல்ல பிள்ளைகளையே எல்லோரும் விரும்புவர். ஆசிரியரும் பெற்றோரும் எமக்கு நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லித்தருகின்றனர். அம்மாவே எமது முதல் ஆசிரியர். எனவே அம்மா கூறும் நல்ல அறிவுரைகளை நாங்கள் கேட்க வேண்டும். இதனால் தான் தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை என்று எம் முன்னோர் கூறியுள்ளனர். நட்புக்கொள்ளும்போது நாம் நல்லவர்களைத் தேடி நட்புக்கொள்ள வேண்டும்.

1. நல்ல பழக்கவழக்கங்கள் இரண்டினைக் கூறுக.

2. யாரை எல்லோரும் விரும்புவர்?

3. எமக்கு நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லித்தருபவர்கள் யார்?

4. எமது முதல் ஆசிரியர் யார் எனக் கூறப்படுகிறது?

5. நாம் யாரைத் தேடி நட்புக்கொள்ள வேண்டும்?

புள்ளிகள் 10

**3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| வண்ணவண்ண | தன்னந்தனியே | அக்கம்பக்கம் |
|---|---|---|
| கூட்டங்கூட்டமாக | திருதிரு | |

1. மான்கள் நீர் அருந்துவதற்குக் ______________________ ச் சென்றன.

2. காவலனைக் கண்ட கள்வன் ______________________ என்று விழித்தான்.

3. அங்கவை ______________________ ப் பூக்களைக் கொய்து மாலை கட்டினாள்.

4. குழந்தை ______________________ நின்று தாயைத் தேடி அழுதது.

5. நாம் ______________________ பார்த்துத் தெருவைக் கடக்க வேண்டும்

புள்ளிகள் 10

**4) பாடநூல் வினா ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ஆய்ச்சியர்குரவை எந்நிலத்திற்குரிய கலை?

2. ஊட்டச்சத்துகள் இரண்டின் பெயர்களைத் தருக.

3. பாலாவியின் ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஈச்சுரம் எது?

4. வேந்தர்களுக்கும் மன்னர்களுக்குமாக ஆடப்படும் ஆடற்கலையின் பெயர் என்ன?

5. பழந்தமிழ் நாட்டை ஆட்சி செய்த மூவேந்தர்களின் பெயர்களைத் தருக.

6. தீயோரின் நட்பு எமக்கு எதைத்தரும்?

7. மன்னன் நெடுஞ்சேரலாதனின் பிள்ளைகளின் பெயர்களைத் தருக.

புள்ளிகள் 10

5) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

***எறும்புக்கூட்டம் ஒன்று சேர்ந்து
இனிய உணவைத் தேடுமே
பறவைக்கூட்டம் ஒன்று சேர்ந்து
பழத்தைத் தேடி உண்ணுமே***

***மான்கள் கூட்டம் ஒன்று சேர்ந்து
மகிழ்ந்து நீரைக் குடிக்குமே
தேனீக் கூட்டம் ஒன்று சேர்ந்து
சிறந்த கூட்டைக் கட்டுமே***

***மயிலின் கூட்டம் ஒன்று சேர்ந்து
மகிழ்வாய் ஆடிக் களிக்குமே
மாந்தன் மட்டும் ஒன்றுசேர
மறுப்பதேனோ கூறுங்கள்***

*- வன்னியா -*

1. இனிய உணவுகளைத் தேடுபவை எவை?

______________________________

2. பறவைக்கூட்டம் எதைத்தேடி உண்கின்றன?

______________________________

3. சிறந்த கூட்டைக் கட்டுபவை எவை?

______________________________

4. மகிழ்வாய் ஆடிக் கழிப்பபவை எவை?

______________________________

5. ஒன்றுசேர மறுப்பவன் யார் எனக் கூறப்படுகின்றது?

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

6) **கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| | | |
|---|---|---|
| கற்றவருக்கு | குறைந்து | வள்ளுவர் |
| சிறந்த | கல்வி | |

செல்வங்களுள் ____________________ செல்வம் கல்விச் செல்வம். அதனால் தான் ____________________ கேடில் விழுச் செல்வம் கல்வி என்றார். கல்வி என்பது அழிவு இல்லாத செல்வம் என்பதே இதன் பொருள். ____________________ அழிவில்லாதது என்றும் நிலைத்து நிற்கக்கூடியது. ஆனால் பிற செல்வங்கள் அழிந்துவிடக்கூடியன. அவை பிறருக்குக் கொடுக்கக்கொடுக்கக் ____________________ கொண்டே போகும். ஆனால் கல்விச் செல்வம் கொடுக்கக் கொடுக்கக் கூடுமேயன்றிக் குறையாது. இத்தகைய சிறப்புடைய கல்வியைக் ____________________ ச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறப்படுகிறது.

புள்ளிகள் 10

7. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

.

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து; 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- 
- 
- 

புள்ளிகள் 15